### திருச்சி பொன்மலைப்பட்டி திரு இருதய மேல்நிலைப்பள்ளியில்

# நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாம்!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் – அன்பில் மகேஸ் பொய்யாமொழி தொடங்கி வைத்தனர்!

திருச்சி, பிப்.1-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று (31.01.2026) திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பொன்மலைப்பட்டி திரு இருதய மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை தொடங்கி வைத்தார்கள்.

திருச்சிராப்பள்ளி மாநகராட்சிக்குட்பட்ட பொன்மலைப்பட்டி திரு இருதய மேல்நிலைப்பள்ளியில் நலம் காக்கும் ஸ்டாலின் மருத்துவ முகாமினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று (31.01.2026) தொடங்கி வைத்து முகாமின் செயல்பாடுகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து மருத்துவம் சார்ந்த நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது:-

முதலமைச்சரின் சிறப்பு திட்டமான நலம் காக்கும் ஸ்டாலின் திட்டம் தமிழ்நாட்டில் மருத்துவ வசதி குறைந்த, சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரகப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகள், மருத்துவ வசதி குறைவாக அமைந்துள்ள நகர்ப்புறப் பகுதிகள் மற்றும் குடிசைப் பகுதிகள் போன்ற பகுதிகளை முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுத்து முகாம் நடைபெற்று வருகிறது. இம்முகாம்கள் நீரிழிவு மற்றும் உயர் இரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மனநல பாதிப்புடையோர், இதயநோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சி குன்றிய குழந்தைகள், மாற்றுத்திறன் கொண்டவர்கள், பழங்குடியினர் மற்றும் சமூக பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்கள் தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின் கீழ் 40 வயதிற்கு மேற்பட்டவர்களை இலக்காகக் கொண்டு “நலம் காக்கும் ஸ்டாலின்”; உயர் மருத்துவ சேவை முகாம் நடத்த திட்டமிடப்பட்டு நடைபெற்று வருகிறது.

**16 லட்சம் பயனாளிகள் பயன் பெற்றுள்ளனர்!**

தமிழ்நாடு முழுவதும் 26வது வாரத்தில் 42வது முறையாக இன்று (31.01.2026) 27 மாவட்டங்களில், 42 இடங்களில் “நலம் காக்கும் ஸ்டாலின்” முகாம்கள் நடைபெறுகிறது. இதில் திருச்சிராப்பள்ளி, பொன்மலைப்பட்டி திரு இருதய மேல்நிலைப்பள்ளியில்நடைபெறும் முகாமின் செயல்பாடுகளை ஆய்வு செய்துள்ளோம். தமிழ்நாடு முழுவதும் 388 வட்டாரங்களில் 1,164 முகாம்களும், பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 முகாம்களும், 10 இலட்சம் மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள 5 மாநகராட்சிகளில் 20 முகாம்களும், 10 இலட்சம் மக்கள் தொகைக்கு குறைவாக உள்ள 19 மாநகராட்சிகளில் 57 முகாம்களும் என மொத்தம் 1,256 முகாம்கள் நடத்திட திட்டமிடப்பட்டு தற்போது வரை 1,076 முகாம்கள் நடத்தப்பட்டு 16,16,517 பயனாளிகள் பயன்பெற்றுள்ளனர்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை பொருத்த வரை 14 வட்டாரத்திற்கு 3 முகாம்கள் வீதம் 42 முகாம்களும், ஊரகப்பகுதிகளும், மக்கள் தொகை 10 இலட்சத்திற்கு மேலாக உள்ள திருச்சிராப்பள்ளி மாநகராட்சியில் 4 முகாம்கள் என மொத்தம் 46 முகாம்கள் நடத்திட இலக்கு நிர்ணயிக்கப்பட்டு தற்போது வரை 35 முகாம்கள் நடைபெற்றுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இதுவரை 35 நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்கள் நடைபெற்றதில் 54,454 நபர்கள் பயன்பெற்றுள்ளனர். இதில் 19807 ஆண்கள் மற்றும் 34647 பெண்கள் பயன்பெற்றுள்ளனர். இந்த முகாம்களில் மொத்தம் 2563மேல் சிகிச்சைக்காக திருச்சிராப்பள்ளி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளனர். இம்முகாம்களில் 4825 கர்ப்பிணி தாய்மார்கள் பயன்பெற்றுள்ளனர்.

மேலும் இம்முகாம்களில் 4245 பேருக்கு எக்கோ ஸ்கேனும், ECG - 33005 நபர்களுக்கும், X-RAY - 1430 நபர்களுக்கும், காப்பீடு திட்டத்தின் கீழ் 993 நபர்களும், மாற்றுத்திறனாளி அட்டை (UDID CARD) 1526 நபர்களுக்கும், ENT -ல் 3636 நபர்களும், பல் மருத்துவத்தில் 4331 நபர்களும், எலும்பு மூட்டு சிகிச்சையில் 1850 நபர்களும் நரம்பு சம்பந்தப்பட்ட சிகிச்சையில் 1220 நபர்களும் மனநல சிகிச்சையில் 599 நபர்களும் தோல் சிகிச்சையில் 2385 நபர்களும் குழந்தைகள் பிரிவில் 1387 நபர்களும் RADIOLOGY பிரிவில் 1480 நபர்களும், இருதயவியல் பிரிவில் 6077 நபர்களும் நுரையீரல் பிரிவில் 1288 நபர்களும் ஆயுஷ் பிரிவில் 5745 நபர்களும் அறுவை சிகிச்சையில் 926 நபர்களும் பிசியோதெரபியில் 2451 நபர்களும் பயன் அடைந்துள்ளார்கள்.

மேலும், கண் அறுவை சிகிச்சை 315 (அரசு 108 10 தனியார் 207) நபர்களுக்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 167 நபர்களுக்கு காசநோய் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு 5 நபர்களுக்கு உறுதிசெய்யப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட பரிசோதனைகள் மட்டுமன்றி, தமிழ்நாடு முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் பதிவு செய்தல், மாற்றுத் திறனாளிகளுக்கான அரசு அங்கீகார சான்றிதழ் வழங்குதல் உள்ளிட்டசேவைகளும் வழங்கப்படுகிறது. இன்று பொன்மலைப்பட்டியில் நடைபெற்று வரும் இம்முகாமில் பொன்மலைப்பட்டி, பொன்னேரிபுரம், மேலகல்கண்டார் கோட்டை, கீழ்க்கல் கண்டார்கோட்டை, ஆலத்தூர், கொட்டப்பட்டு மற்றும் சுப்ரமணியபுரம் பகுதிகளை சேர்ந்த பொதுமக்கள் பயன்பெறும்; வகையில் இம்முகாம் நடைபெற்று வருகிறது.

மேலும்இதுவரை தமிழ்நாட்டில் அரியலூர், காஞ்சிபுரம், மயிலாடுதுறை, நாகப்பட்டினம், பெரம்பலூர், இராணிப்பேட்டை, நீலகிரி, தேனி, திருப்பத்தூர், வேலூர் ஆகிய 10 மாவட்டங்களில் நலம் காக்கும் ஸ்டாலின் முகாம்கள் முடிவடைந்துள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் 06.02.2026 அன்று சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளி வாயிலாக ரூ.229.24 கோடி செலவில் ஜெயங்கொண்டம், மயிலாடுதுறை, ராஜபாளையம், அருப்புக்கோட்டை, குளித்தலை, காங்கேயம் மற்றும் திண்டிவனத்தில் மாவட்ட தலைமை மருத்துவமனை கட்டிடங்கள் திறந்துவைக்க பட உள்ளன.மேலும் ரூ.104 கோடி செலவில் பட்டுக்கோட்டை, கம்பம், கொடைக்கானல், ஆலங்குளம், சங்கரன்கோவில், பெரியகுளம், உத்தமபாளையம், முசிறி, குற்றாலம், ஜல்லிப்பட்டி, செஞ்சி, வேப்பூர் (பெரம்பலூர்), வேப்பூர் (கடலூர்), திருக்குவளை, கும்மிடிப்பூண்டி, கிருஷ்ணாபுரம், திருவாடனை, கடலாடி, கோத்தகிரி, அன்னூர், விருத்தாசலம், பண்ருட்டி, நிலக்கோட்டை ஆகிய 23 ஊர்களில் அரசு மருத்துவமனை கட்டிடங்கள் திறந்துவைக்கப்பட உள்ளன. மேலும் ரூ.11.70 கோடி செலவில் படுவஞ்சேரி, கிருஷ்ணாபுரம், விருதாச்சலம், களியக்காவிளை, வடிவீஸ்வரம், செங்கல், அறந்தாங்கி, தாமரன்கோட்டை, காட்டூர், மம்சாபுரம், ஆகிய இடங்களில் ஆரம்ப சுகாதார நிலைய கட்டிடங்கள் திறந்து வைக்கப்பட உள்ளன.ரூ.9.91 கோடி செலவில் கிண்டி உணவு பகுப்பாய்வு கூட வளாகத்தில் புதிய கட்டிடம் மற்றும் நுண்ணுயிரியல் ஆய்வகம் மற்றும் ரூ.4.61 கோடி செலவில் மதுரை உணவு பகுப்பாய்வு கூட வளாகத்தில் நுண்ணுயிரியல் ஆய்வகம் என ஆகமொத்தம் ரூ.359.46 கோடி மதிப்பீட்டில் கட்டிடங்கள் திறந்து வைக்கப்படவுள்ளது.

இது தவிர திருச்சிராப்பள்ளி புத்தூர் மகாத்மா காந்தி நினைவு அரசு மருத்துவமனையில் பொதுப்பிரிவு கட்டிடம்ரூ.135 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. விரைவில் இக்கட்டிடம் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்படவுள்ளது என மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்வில்,மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன், மாநகர நல அலுவலர் சுபாஷ் காந்தி, மருத்துவக்கல்லூரி முதல்வர் மரு.குமாரவேல்,மருத்துவம் மற்றும் ஊரக நலப் பணிகள் இணை இயக்குனர் கோபிநாத், மண்டல தலைவர் மதிவாணன், அரசு மருத்துவர்கள், பணியாளர்கள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### கரூர் ஊராட்சி ஒன்றியத்தில்

# ரூ.22.23 கோடியில் 35 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள்!

## வி.செந்தில்பாலாஜி எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்!

கரூர், பிப்.1-

கரூர் ஊராட்சி ஒன்றியத்தில் ரூ. 22.23 கோடி மதிப்பீட்டில் 35 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளைகரூர்சட்டமன்றஉறுப்பினர் வி.செந்தில் பாலாஜி தொடங்கி வைத்தார்.

கரூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூ22.23 மதிப்பீட்டில் 35 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகளை தொடங்கி வைக்கும் நிகழ்ச்சிகள் நடைபெற்றன. கரூர் மாவட்ட கலெக்டர் மீ.தங்கவேல் தலைமை வகித்தார். கரூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர், கரூர் மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில்பாலாஜி பணிகளை தொடங்கி வைத்தார்.

பின்னர் அவர் கூறியதாவது:

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், கிராமப்புறங்களை நகர்ப்புறத்திற்கு இணையாக மேம்படுத்தும் வகையில், பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகளை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக கிரமப் பகுதிகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தக் கூடிய வகையில் பல்வேறு புதிய சிறப்பு திட்டங்கள் எடுத்துக்கொள்ளப்பட்டு, ஒவ்வொரு பணிகளாக நிறைவு செய்யப்பட்டு பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுகின்றன.

அந்த வகையில், கரூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டம் மற்றும் சிறு கனிம நிதி திட்டத்தின் கீழ் கரூர் ஊராட்சி ஒன்றியக்குட்பட்ட காதப்பாறை ஊராட்சியில் புதிய சமுதாயக்கூடம். மேல்நிலை நீர்தேக்கத் தொட்டி, சிமெண்ட் சாலை அமைத்தல் பணிகளையும். மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சி பகுதியில் சிமெண்ட் சாலையும். புதிய கிராம நிர்வாக அலுவலக கட்டிடமும், சிமெண்ட் சாலை அமைத்தல் ணிகளையும்,

நெரூர் வடபாகம் மற்றும் தென்பாகம் ஊராட்சியில் சிமெண்ட் சாலை, சக்தி நகரில் மழை நீர் வடிகால், புதுப்பாளையம் மற்றும் ரெங்கநாதன் பேட்டையில் ஒரு வழித்தட சாலையை, இருவழித்தட சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதலும், சோமூர் ஊராட்சியில் வடிகாலுடன் கூடிய சிமெண்ட் சாலை, அச்சமாபுரத்தில் புதிய நியாய விலைக் கடை, கல்பாளையத்தில் புதிய சமுதாயக்கூடம், திருமுக்கூடலூர் மற்றும் சோமூர் ஒரு வழித்தட சாலையை இருவழித்தட சாலையாக அகலப்படுத்தி உறுதிப்படுத்துதல் பணி என மொத்தம் ரூ.22.23 கோடி மதிப்பீட்டில் 35 புதிய வளர்ச்சித் திட்டப் பணிகள் தொடங்கி வைக்கப்பட்டுள்ளது என்று கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் வீரபத்திரன், வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், வட்டார வளர்ச்சி அலுவலர் விஜயலட்சுமி. மாவட்டத் துணைச் செயலாளர் எம்எஸ்கே.கருணாநிதி, ஒன்றிய கழகப் பொறுப்பாளர் முத்துக்குமாரசாமி, மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பொதுமக்களின் கோரிக்கைகளை ஏற்று ஆவடி பேருந்து நிலையத்திலிருந்து புதிய வழித்தடங்களில் 7 அரசு மாநகரப் போக்குவரத்து சேவையினை தமிழ்நாடு சிறுபான்மையினர் நலத்துறை அமைச்சர் ஆவடி சாமு.நாசர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொடியசைத்து தொடங்கி வைத்தார் உடன் ஆவடி மாநகராட்சி மேயர் உதயகுமார், மண்டல குழு தலைவர்கள் ஜோதிலட்சுமி, ஜி. ராஜேந்திரன், அமுதா பேபிசேகர், மாநகர பகுதி கழக செயலாளர்கள் சன்.பிரகாஷ், ஜி.நாராயணபிரசாத், பொன்.விஜயன், மாவட்ட வழக்கறிஞர் அமைப்பாளர் பெ. வினோத் உள்பட போக்குவரத்து துறை அதிகாரிகள் திமுக நிர்வாகிகள் கவுன்சிலர்கள் பலர் உள்ளனர்.



# சென்னை தெற்கு மாவட்ட பகுதி கழக செயலாளர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் – அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!



சென்னை தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட பகுதிக் கழக செயலாளர்கள் - ஒன்றியக் கழக செயலாளர்கள் ஆலோசனைக்கூட்டம் மாவட்ட அவைத் தலைவர் எஸ்.குணசேகரன் தலைமையில் இன்று (01.02.2026 ஞாயிறு) மாலை 5 மணி அளவில் சைதை பஜார் சாலையில் உள்ள சென்னை தெற்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

எனவே இந்த ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்டத்திற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதி கழக செயலாளர்கள் மற்றும் ஒன்றியக் கழக செயலாளர்கள் உள்ளிட்டோர் பங்கேற்றிடுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**அமைச்சர் மா.சுப்பிரமணியன்**
செயலாளர், சென்னை தெற்கு மாவட்ட தி.மு.க.

# ஆவடியில் புதிய பேருந்து சேவை - ரூ. 26.50 லட்சம் மதிப்பில் நியாய விலைக் கடை!

## அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு தொடங்கி வைத்தார் !

திருவள்ளூர் பிப்.1-

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி தொகுதிக்கு உட்பட்ட பகுதியில் மக்கள் நீண்ட நாள் கோரிக்கையாக கூடுதல் பேருந்து மற்றும் வழித்தடங்களை அமைத்து தர கோரிக்கை விடுத்து வந்தனர் இதை நிறைவேற்றும் விதமாக ஆவடி தொகுதிக்கு உட்பட்ட ஆவடி மாநகர போக்குவரத்து கழகம் சார்பில் 7 புதிய வழி தடங்கள் மற்றும் கூடுதல் பேருந்து இயக்க திட்டமிடப்பட்டு தொடக்க விழா நேற்று நடைபெற்றது இதில்

இந்நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு. நாசர் கலந்து கொண்டு பேருந்தினை கொடியசைத்து வைத்து தொடங்கி வைத்தார்.

பின்னர் பேருந்து நடத்துனர் மற்றும் ஓட்டுனருக்கு கைகடிகாரம் அணிவித்து மகிழ்ந்தார் மேலும் பேருந்தில் ஏறி பேருந்தில் பயணித்த அனைவருக்கும் பயண சீட்டு பெற்றுக் கொண்டு பயணத்தை மேற்கொண்டார். இந்தப் பேருந்தானது புதிய வழிதடத்தில் ஆவடியில் இருந்து

புதிய வழித்தடங்களில் தடம் எண் - எ54 சிஆவடி - பூந்தமல்லி இடையே

வழி. தண்டரை, திருமணம், சிவன் கோயில், காவல்சேரி, வரதராஜபுரம் சுங்கச்சாவடி, பூந்தமல்லி வரையும், தடம் எண் - எஸ்73 டீ அம்பத்தூர் எஸ்டேட் - திருவேற்காடு(சிற்றுந்து) வழி. டன்லப், அத்திப்பட்டு குப்பம், ராஜன்குப்பம், வடநும்மல், திருவேற்காடுவரையும், இதே போல் தடம் எண்கள்:153 சி, பட்டாபிராம் - பூந்தமல்லி வழி. தண்டரை, சித்துகாடு கூட்ரோடு, காவல் சேரி, திருமழிசை, பூந்தமல்லிக்கும் மற்றும் கூடுதல் பேருந்துகளாக 202 எ ஆவடி - தாம்பரம்

வழி. தண்டரை, சித்துகாடு, வரதராஜபுரம், முடிச்சூர், தாம்பரம். 580 - ஆவடி - புதுவாயல்

வழி. திருநின்றவூர், தாமரைப்பாக்கம், வெங்கல், பெரியபாளையம், ஆரணி, புதுவாயல் 73 எ - ஆவடி - கோயம்பேடு வழி. முருகப்பா பாலிடெக்னிக், அன்னூர் ரயில்வே ஸ்டேஷன், அயப்பாக்கம், அயனாம்பாக்கம், வாநகரம், நெற்குன்றம், கோயம்பேடு வரை செல்லும் பேருந்துகள் இயக்கப்பட்டது

இதனைத் தொடர்ந்து மாநகராட்சி வார்டு எண் 41 TNHB ஆவடி மாநகராட்சி தொடக்கப்பள்ளி எதிரில் மற்றும் 35 வார்டு அருந்ததிபுரம் பிரதான சாலையில் அருகில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியின் கீழ் 26.50 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக சிந்தாமணி நியாய விலை கடையை அமைச்சர் சாமு.நாசர்ரிப்பன் வெட்டி பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்

பின்னர் அங்கு இருந்த பொது மக்களுக்கு இனிப்புகளை வழங்கி மகிழ்ந்தார். மேலும் நியாய விலை கடையில் ரேஷன் பொருட்களையும் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் ஆவடி மாநகராட்சி மேயர் ஜி. உதயகுமார், ஆவடி மாநகராட்சி ஆணைய சரண்யா மண்டல குழு தலைவர்கள் ஜோதிலட்சுமி, ஜி. ராஜேந்திரன் அமுதா பேபி சேகர் மாநகர பொறுப்பாளர் சன்.பிரகாஷ், பகுதி செயலாளர்கள் ஜி நாராயண பிரசாத், பொன் விஜயன், வழக்கறிஞர் வினோத், மாமன்ற உறுப்பினர்கள் கீதா யுவராஜ், சாந்தி பாண்டியன், நிர்வாகிகள், பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# வாடிப்பட்டியில் பேரறிஞர் அண்ணா நினைவு தின அமைதிப் பேரணி!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் பி.மூர்த்தி அறிக்கை!



மதுரை, பிப்.1-

மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் வருகிற மூன்றாம் தேதி வாடிப்பட்டியில் பேரறிஞர் அண்ணா நினைவு தினத்தை முன்னிட்டு அமைதிப் பேரணி நடத்தி அவரது திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட உள்ளதாக மாவட்ட செயலாளர் வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி விடுத்துள்ள அறிக்கையில் கீழ்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எனும் தாரக மந்திரத்தை கழகத்தினருக்கு போதித்தவர், எல்லோராலும் பேரறிஞர் அண்ணா என்று போற்றப்படுபவர், தமிழர்களுக்காகவும், தமிழுக்காகவும் பெரும் தொண்டாற்றிய வருமான அறிஞர் அண்ணா அவர்களின் 57 வது நினைவு தினத்தை முன்னிட்டு வரும் 03.02.2025 செவ்வாய்க்கிழமை மதுரை வடக்கு மாவட்ட திமுக சார்பில் வாடிப்பட்டி பேருந்து நிலையம் முன்பாக அமைந்துள்ள பேரறிஞர் அண்ணா அவர்களின் திரு உருவ சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செய்திடும் நிகழ்வு காலை 9 மணி அளவில் நடைபெற உள்ளது. முன்னதாக வாடிப்பட்டி மதுரை மத்திய கூட்டுறவு வங்கி கிளை அலுவலகம் முன்பாக இருந்து அமைதி பேரணி புறப்பட உள்ளது எனவே இந் நிகழ்வுகளில் மதுரை வடக்கு மாவட்ட திமுகவுக்குட்பட்ட மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைக் கழகச் செயலாளர்கள், நிர்வாகிகள், கழகத்தினர் என அனைவரும் பெரும் திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு மதுரை வடக்கு மாவட்ட செயலாளரும், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சருமான பி.மூர்த்தி தமது அறிக்கையின் மூலமாக கழகத்தினருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

### அமைச்சர் ஆவடி சாமு.நாசர் – எஸ் ஜெகத்ரட்சகன் எம்.பி. –

### இனிகோ இருதயராஜ் எம்.எல்.ஏ, சிறப்புரை! வி.ஜி.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலை

# இன்று திருவள்ளூர் மேற்கு மாவட்ட தி.மு.க சார்பில் ‘தமிழ்நாடு தலைகுனியாது’ மாபெரும் பரப்புரை கூட்டம்!

## மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ அறிக்கை!



திருவள்ளூர் பிப்.1-

திருவள்ளூர் மேற்கு மாவட்ட திமுக சார்பில் தமிழ்நாடு தலைகுனியாது பரப்புரை கூட்டம் இன்று 01-02-2026 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி அளவில் திருவள்ளூர் ரயில் நிலையம் அருகில் கலைஞர் திடலில் மாவட்ட கழக செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ எனது தலைமையில் நடைபெறுகிறது திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.இராஜேந்திரன் முன்னிலை வகிக்கிறார்

நகர கழகச் செயலாளர் சி.சு. ரவிச்சந்திரன், நகர்மன்ற தலைவர் உதய மலர் பாண்டியன், நகர கழக நிர்வாகிகள் ஆ. கமலக்கண்ணன், டி.எம்..ரவி, எம்.பரசுராமன், ராஜேஷ்வரி கைலாசம், எஸ்.டி.பி.சம்பத்ராஜா, இ.குப்பன், டி.என்.ஆர்.சீனிவாசன் டி.சிவக்குமார், வரவேற்புரையற்றிகிறார்கள்

இக்கூட்டத்தில் சிறுபான்மையினர் நலன்( ம) வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி.சா.மு.நாசர், அரக்கோணம் நாடாளுமன்ற உறுப்பினர்- கழக கொள்கை பரப்புச்செயலாளர் முனைவர் எஸ். ஜெகத்ரட்சகன். திருச்சி கிழக்கு சட்டமன்ற சட்டமன்ற உறுப்பினர் முனைவர் இனிகோ இருதயராஜ் ஆகியோர் சாதனை விளக்கி பேருரையற்றிகிறார்கள் இதில் தலைமை செயற்குழு உறுப்பினர் திருத்தணி எம்.பூபதி, மாவட்ட அவைத் தலைவர் கே.திராவிட பக்தன், தொகுதி பார்வையாளர்கள் மாஸ்டர் பெ.சேகர், ச.சண்முகநாதன், மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆர்.டி.இ.ஆதிசேஷன், ஒ.ஏ.நாகலிங்கம், குருதாஸ், டாக்டர் வி.சி.ஆர். குமரன், சி.ஜெயபாரதி, எம்.மிதுன்சக்கரவர்த்தி, ப.சிட்டிபாபு, எஸ். கே.ஆதாம், வி.கிஷோர், மு.சுப்பிரமணியம், ராஜேஸ்வரி ரவிந்திரநாத், ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் எஸ்.மகாலிங்கம், கூளூர் எம். ராஜேந்திரன், மோ. ரமேஷ், கே. அரிகிருஷ்ணன், தா.மோதிலால், பிரகாஷ்ஞானஒளி, ஆர். ஜெயசீலன், ஜி.ரவிந்திரா, ஆர்த்தி ரவி, சி.என். சண்முகம், சி.ஜே.சீனிவாசன், பெ.பழனி, என். கிருஷ்ணன், டி.ஆர்.கே. பாபு, கே.ராஜேந்திரன், மா.ரகு, பா.சம்பத், ஏ.எல். விஜயகுமார், வி.வினோத்குமார், பி.டி. சந்திரன், சி.ஜெ.செந்தில்குமார், மற்றும் மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் கழக நிர்வாகிகள் வார்டு கிளைக் கழக செயலாளர்கள் இந்நாள் முன்னாள் உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள் ஒன்றிய நகர பேரூர் கழக அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் கழக மூத்த முன்னோடிகள் அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பிக்குமார் அன்புடன் கேட்டுக்கொள்கிறேன் முடிவில் வட்டச் செயலாளர்கள் ப.முரளி எம். பார்த்திபன் பாஸ்கர் நன்றி கூறுகிறார்கள்